செய்தி வெளியீடு எண்: 539 நாள்: 13.08.2018

# செய்தி வெளியீடு

## சென்னையில் இரண்டு திருமண மண்டபங்கள் கட்டும் பணி விரைந்து முடிக்க இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் ஆய்வு

------------

சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (13.08.2018) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் சென்னையில் மயிலாப்பூர் அருள்மிக கபாலீஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் ஆகிய திருக்கோயில்களுக்கு சொந்தமான இரண்டு நவீன வசதிகளுடன் கூடிய திருமண மண்டபங்கள் கட்டும் பணிகள் முன்னேற்றம் மற்றும் விரைந்து முடிப்பது குறித்து இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் மற்றும் இதர அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பேசும் போது சென்னையில் மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாகப் பசுமை வழிச் சாலையில் ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன வசதிகளுடைய திருமண மண்டபம் கட்டுமான பணிகள் முடிவுற்ற நிலையில் நிலுவையில் உள்ள இறுதி நிறைவுப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதேபோல் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் திருமண மண்டபத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவுற்றுள்ள நிலையில் நிலுவையில் உள்ள முழுமையாக நிறைவேற்ற வேண்டிய இறுதிப் பணிகளை விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று ஆய்வின் போது இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வுக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருமதி ஆர்.ஜெயா இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் திருமதி ந.திருமகள் (பொது), கூடுதல் ஆணையர் விசாரணை(பொ) திரு.அர.சுதர்சன், கண்காணிப்புப் பொறியாளர் திருமதி கார்த்தியாயினி, சென்னை மண்டல இணை ஆணையர் திரு.இலட்சுமணன், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் திருமதி காவேரி, அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் திரு.சந்திரசேகர் மற்றும் பொறியியல் பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**